## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 8-3 - அங்கும் இங்கும்
## (ஆழ்வார் இவ்விபூதியில் எம்பெருமானுக்குப் பரிவர் இல்லாமை பற்றி அஞ்சி, அப்பிரான் அருளால் எங்கும் பரிவர் உளர் என்று உணர்ந்து பயம் தீர்தல்)

3469 * அங்கும் இங்கும் * வானவர் தானவர் யாவரும் *
எங்கும் இனையை என்று உன்னை * அறியகிலாது அலற்றி **
அங்கம் சேரும் * பூமகள் மண்மகள் ஆய்மகள் *
சங்கு சக்கரக் கையவன் என்பர் * சரணமே 1

3470 சரணமாகிய * நான்மறை நூல்களும் சாராதே *
மரணம் தோற்றம் * வான் பிணி மூப்பு என்றிவை மாய்த்தோம் **
கரணப் பல்படை * பற்றறவோடும் கனலாழி *
அரணத் திண்படை ஏந்திய * ஈசற்கு ஆளாயே 2

3471 ஆளுமாளார் * ஆழியும் சங்கும் சுமப்பார் தாம் *
வாளும் வில்லும் கொண்டு * பின் செல்வார் மாற்றில்லை **
தாளும் தோளும் * கைகளை ஆரத் தொழக் காணேன் *
நாளும் நாளும் நாடுவன் * அடியேன் ஞாலத்தே 3

3472 ஞாலம் போனகம் பற்றி * ஓர் முற்றா உருவாகி *
ஆலம் பேரிலை * அன்னவசம் செய்யும் அம்மானே! **
காலம் பேர்வதோர் * காரிருள் ஊழி ஒத்துளதால் * உன்
கோலங்காரெழில் * காணலுற்று ஆழும் கொடியேற்கே 4

3473 கொடியார் மாடக் * கோளுரகத்தும் புளிங்குடியும் *
மடியாதின்னே * நீ துயில் மேவி மகிழ்ந்தது தான் **
அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ? * அன்றேல் இப்
படி தான் * நீண்டு தாவிய அசைவோ? * பணியாயே 5

3474 பணியா அமரர் * பணிவும் பண்பும் தாமேயாம் *
அணியார் ஆழியும் * சங்கமும் ஏந்துமவர் காண்மின் **
தணியா வெந்நோய் * உலகில் தவிர்ப்பான் * திருநீல
மணியார் மேனியோடு * என் மனம் சூழ வருவாரே 6

3475 வருவார் செல்வார் * வண்பரிசாரத்து இருந்த * என்
திருவாழ் மார்வற்கு * என் திறம் சொல்லார் செய்வதென்? **
உருவார் சக்கரம் * சங்கு சுமந்து இங்கு உம்மோடு *
ஒருபாடுழல்வான் * ஓரடியானும் உளன் என்றே 7

3476 என்றே[1] என்னை * உன் ஏரார் கோலத் திருந்தடிக் கீழ் *
நின்றே ஆட்செய்ய * நீ கொண்டருள[2] நினைப்பது தான்? **
குன்றேழ் பாரேழ் * சூழ்கடல் ஞாலம் முழுவேழும் *
நின்றே தாவிய * நீள்கழல் ஆழித் திருமாலே! 8

3477 திருமால்! நான்முகன் * செஞ்சடையான் என்றிவர்கள் * எம்
பெருமான் தன்மையை * யார் அறிகிற்பார்? பேசி என்? **
ஒருமா முதல்வா! * ஊழிப்பிரான்! என்னை ஆளுடை *
கருமா மேனியன் என்பன் * என் காதல் கலக்கவே 9

3478 கலக்கம் இல்லா * நல்தவ முனிவர் கரை கண்டோர் *
துளக்கம் இல்லா * வானவர் எல்லாம் தொழுவார்கள் **
மலக்கம் எய்த * மாகடல் தன்னைக் கடைந்தானை *
உலக்க நாம் புகழ்கிற்பது * என் செய்வது உரையீரே 10

3479 * உரையா வெந்நோய் தவிர * அருள் நீள்முடியானை *
வரையார் மாட * மன்னு குருகூர்ச் சடகோபன் **
உரையேய் சொல் தொடை * ஓராயிரத்துள் இப்பத்தும் *
நிரையே வல்லார் * நீடுலகத்துப் பிறவாரே 11

**அடிவரவு:** அங்கு சரணம் ஆளும் ஞாலம் கொடி பணி வருவார்
என்றே திருமால் கலக்க உரை வார்

[1] என்றேல்
[2] கொண்டருளி